# ***AMAZON***

அமெரிக்காவில் மக்கள் எவ்வாறு பொருட்கள் வாங்குகின்றனர்? ஐம்பத்தைந்து வீதம் மக்கள் (55%) கணினி மூலம் ***Amazon*** வழியாகப் பொருட்களை வாங்குகின்றனர் என்று தெரிய வந்துள்ளது. இப்படிக் கணிணிக் கொம்பெனிகள் வந்து, கடைகளில் தொழில் குறைந்ததால், நடுத்தரக் குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன என்று அமெரிக்க அதிபர் குற்றம் சாற்றியுள்ளார். இவ்வாண்டு **Sears, Macy's, JCPenny's** போன்ற தொழிலகங்கள் கடையை மூட ***Amazon*** ஒரு காரணம் என்று கூறப் படுகின்றது.

ஆனால் ***Amazon*** அமெரிக்காவில் மட்டும் ஒரு இலட்சத்து இருபதாயிரம் பேருக்கு தான் வேலை வாய்ப்பு அளித்திருப்பதையும், மற்றும் உலகின் மற்ற நாடுகளில் மேலும் மூன்று இலட்சம் பேரை வேலையில் அமர்த்தியிருப்பதையும் சுட்டிக் காட்டுகின்றது. இக் கொம்பெனி அமெரிக்காவின் **Seattle** (*சியேற்றல்*) நகரில் மட்டும் ஒரு இலட்சம் சனங்களுக்கு தொழில் வாய்ப்பு அளித்து அந்நகரை சீரும் சிறப்பும் அடையச் செய்துள்ளது. இப்போது இன்னுமொரு இரண்டாவது நகரத்தைத் தான் தேடிக் கொண்டிருப்பதாகவும் தனது இரண்டாவது அலுவலகத்தை **(HQ2); (Second Head Quarters)** அந்த நகரில் அமைத்து இன்னும் ஐம்பதாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்க தான் தயாராக இருப்பதாகவும், தன்னை வரவேற்று ஐம்பதாயிரம் குடும்பங்களை வாழ வைக்க எந்த நகருக்கு ஆசையோ, அந்த நகர் முன் வரலாம் என்றும் ***Amazon*** பறை சாற்றியுள்ளது.

இது வரை மொத்தம் 232 நகர்கள் தங்கள் பெயர்களை ***Amazon***-இடம் பதிவு செய்து க்யூவில் வரிசையாக நிற்கின்றன. கனடாவின் **Toronto, Vancouver, Montreal, Calgary** ஆகிய நகர்கள் தங்கள் பெயர்களை ***Amazon***-இடம் பதிவு செய்துள்ளன. ஆனால் அப்படி முன் வரும் நகர், தனக்குத் தேவையான நிலம் முழுவதையும் இலவசமாக அளிக்க வேண்டும் என்றும், பல ஆண்டுகளுக்கு தனக்கு வரி விலக்கும் தர வேண்டும் என்றும் ***Amazon*** கூறியிருதப்பதால், இதற்கு சற்று எதிர்ப்பும் ஏற்பட்டுள்ளது.

இதில் கவனிக்க வேண்டிய ஒன்று என்னவென்றால் அமெரிக்க அரசாங்கத்தையோ கனடிய அரசாங்கத்தையோ தாண்டி ***Amazon*** நேரடியாக நகர்களுடன் பேசும் நிலை ஏற்பட்டுள்ளது. நகர்களும் நேரடியாக ***Amazon***-னிடம் பேசுகின்றன. அப்படியானால் பெரிய நாடுகளின் அரசாங்கங்களைத் தாண்டி நாங்கள் எங்கோ சென்று கொண்டிருக்கின்றோம். இனி நாட்டுக்கும் நாட்டுக்கும் இடையில் அல்ல, மாறாக நகருக்கும் நகருக்கும் இடையே தான் போட்டி. நகர் தான் பெரிய பெரிய பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை வந்துள்ளது. இனி எங்கள் நகரம் விருத்தியடையத் தடைகள் இருந்தால் நாங்கள் அரசாங்கத்தைக் குறை சொல்லிக் கொண்டு இருக்க இயலாது. இனி தாய் நாடு என்று கதைத்தால் எங்கள் பிள்ளைகளுக்கு அதிகமாக ஒன்றும் எடுபடாது. ஒரு வேளை எதிர்காலத்திற்கு இது நல்லதா, கெட்டதா? காத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

**Amazon** மூலம் நத்தார் பண்டிகைக் கொண்டாட்டத்திற்குப் பிள்ளைகள் தயாராகின்றனர். நீங்களும் **Amazon** மூலம் ஜாமான் வாங்க இருக்கின்றீர்கள். *"நெஞ்சத்திற்கு நெருக்கமானவரும் கடவுள் தன்மை கொண்டவருமான ஒரே மகன்"* விண்ணிற்கும் மண்ணிற்கும் இடையே பாலம் அமைக்க வருகின்றார். புத்தாண்டில் புது வாழ்வு மலர்க! நலம் தரும் இறையாட்சி வருக! கவலைகள் ஒழிக! மகிழ்ச்சி நிறைக! இறை அமைதி எம்மை ஆட்கொள்வதாக!

கிறிஸ்துவில் அன்புடன்